[13th February 1959

SRI A. GOVINDASAMY : திண்டிவனத்தில் வெய்யில் காலங்களிலே குடிதண்ணீருக்குக் கஷ்டம் அதிகம் இருப்பதால், இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழில் தனியாகச் சொல்லவேண்டும் போலிருக்கிறது. திண்டிவனம் குடி தண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 17.34 லட்சம். அதில் ரூ. 16.72 லட்சம் செலவழிக்கப்பட்டு, அந்தத் திட்டம் முடியக் கூடிய கட்டத்தில்தான் இருக்கிறது. கனம் அங்கத்தினர் புதிதாகச் சொல்லி; அதன் பேரில் அரசாங்கம் அதை முடிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. திட்டம் முடியக்கூடிய கட்டத்தில் இருக்கிறது.

SRI K. R. VISWANATHAN : இந்தத் திட்டங்கள் முடிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிந்துகொண்டிருக்கிறது. முடிக்கப்படாமல் இல்லை.

Second Five-Year Plan

* 282 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Collector, Coimbatore, submitted any proposals for the Second Five-Year Plan for the Coimbatore district in 1956;

(*b*) if so, the cost thereof; and

(*c*) how far they have been implemented?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A District Plan for Coimbatore district was prepared by the Collector of Coimbatore in 1955. It embodied schemes sponsored at the State level and by District Planning Board and Local Planning Committees to be implemented during the Second Five-Year Plan, Third or Fourth.

(*b*) 49·19 crores.

(*c*) Schemes costing 11·89 crores will be implemented during the Second Five-Year Plan.

SRI N. K. PALANISAMI : கலெக்டர் கொடுத்த திட்டத்தைப் பூராவும் சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்களா ? அப்படியானால், பூராவும் நடத்திவைப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

THE HON. SRI. C. SUBRAMANIAM : 49.19 கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 11.89 கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாக்கித் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயோ நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயோ எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

SRI P. G. MANICKAM : கலெக்டரால் அனுப்பப்பட்ட திட்டங்களில் இன்னும் ஏதாவது வேலைகள் செய்யப்படாமல் இருந்தால், திட்டப்படி தொகை சாங்ஷன் செய்யப்படாமலிருந்தால், அந்தத் திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்வதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

13th February 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுதான் இப்பொழுது சொன்னேன். ரூ. 49.19 கோடி ரூபாய் அளவிலே 11.89 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இப்பொழுது திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாக்கித் திட்டங்கள் மூன்றாவது, நான்காவது திட்டத்தில் எடுத்துக்கொள்வதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

SRI N. K. PALANISAMI : கலெக்டர் கொடுத்திருக்கும் திட்டத்தில் கோயமுத்தூரில் ஒரு மெடிகல் காலேஜ் திறக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்டிப்பாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் யோசனை அளவில்தான் இருக்கிறது. திட்ட அளவுக்கு வரவில்லை.

Political sufferers

* 283 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the lands in Wenlock Down, Ootacamund Nilgiris district, have been assigned to political sufferers; and

(*b*) if so, the extent of lands assigned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) One hundred and twenty acres of lands were assigned to the 12 persons at the rate of ten acres each.

SRI N. K. PALANISAMI : இந்த நிலங்கள் விவசாயத்திற்காக கொடுக்கப்பட்டனவா ? அப்படியென்றால், அவை விவசாயம் செய்யப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாயத்திற்குத்தான் கொடுக்கப்பட்டன. ஆனால், சில நிபந்தனை பேரில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. "ஸாயில் கன்ஸர்வேஷன்" நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும், காட்டிலாகாவினர் சொல்கிற மரம், செடிகள்தான் வைக்கவேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் இருக்கின்றன. அவ்வாறு சுற்றுப் பக்கத்தில் வைக்கப்படுகிற மரங்கள் கூட அரசாங்கத்திற்குச் சேர வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இது கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. RAMALINGA PADAYACHI : நிலம் இல்லாத தியாகிகளைத் "தியாகி" என்று கருதுவதோடு அல்லாமல், ஏழை என்றும் கருதி நிலம் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு நிலம் அடமானம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிலமில்லாத ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய நிலத்தை அடமானம் செய்ய வேண்டியது வேறு விஷயம். அது கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI V. SUBBIAH : பண்படுத்தாத காடு கரம்பாக இருக்கும் நிலங்களைக் கொடுத்ததனால். அவர்கள் கையிலே இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்திருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திடமிருந்து கடனும் வாங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் ? அவர்களுக்கு வேறு நல்ல நிலங்களை மாற்றிக் கொடுப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கிடைக்கக்கூடிய நிலத்தைத்தான் கொடுக்க முடியும். அவர்களை நிர்ப்பந்திக்கவில்லை. அவர்கள் பார்த்து வேண்டுமென்று வாங்கிக்கொண்டார்கள்.